உ

சிவமயம்




# அமரர் திருமதி. சரோஜினி அமிர்தசிங்கம்

இறைபதம் எய்தியமை குறித்து வெளியிடப்படும்

# நினைவு மலர்

12-09-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி. சரோஜினி அமிர்தசிங்கம் அவர்கள்

தோற்றம்
05-01-1952

மறைவு
12-08-2008



## திதி நிர்ணய வெண்பா

சர்வதாரி வருடம் ஆடித்திங்கள்
பூர்வபட்சத்து ஏகாதசி நன்நாளில் - சீர்பெற்று
சரோஜினி அமிர்தசிங்கம் பூவுலகை நீத்து
இனிப்பிறவா இடஞ்சேர்ந்தார் இனிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

**அமரர் திருமதி. சரோஜினி**

**அமிர்தசிங்கம்**

அவர்கள்

இல்லறத்தை நல்லறமாக்கி

சுற்றத்தாற் சுற்றப்படவொழுகி

வையத்துள் வாழ்வாங்கு

வாழவைத்து வாழ்ந்த

பெருந்தகையாளராகிய

எமது தாயாருக்கு

இம்மலர் சமர்ப்பணம்

**– இங்ஙனம் –**

***கணவர், பிள்ளைகள், மருமக்கள்,***

***பேரப்பிள்ளைகள்,***

***சுற்றத்தார்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இந்துமா கடலில் முத்து என்று அழைத்து மகிழும் இலங்கை மண்ணின் தலை என திகழும் யாழ்ப்பாணத்தின் மேற்கே அமைந்த சப்த தீவுகளில் முதலான காரைநகர் களபூமி விளானைப் பகுதியில் வேளாண் குடிவழித் தோன்றல் கந்தப்பு ஆறுமுகத்துக்கும் லட்சுமிப்பிள்ளைக்கும் கனிஷ்டபுத்திரியாக 1952 தைத்திங்கள் 5ம் திகதி அவதரித்தார். இவர் சுப்பிரமணியம் அன்னம்மா, அம்பலவாணர், ராஜரட்ணம் மனோண்மணி ஆகியோரை சகோதரர்களாகப் பெற்றார்.

பெற்றோரின் அன்பு நிறைந்த அரவணைப்பில் வளர்ந்த சரோஜினி கல்விப்பருவம் எய்தியதும் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை தொடங்கினார். பின் காரைநகர் இந்துக்கல்லூரியிலும் சுண்ணாகம் இராமநாதன் கல்லூரியிலும் கல்வியைப் பயின்றார்.

1971ம் ஆண்டு தைமாதம் 4ம் நாள் சத்திரந்தை கந்தையா தங்கமுத்து தம்பதிகளின் புதல்வன் அமிர்தசிங்கத்தை தமது வாழ்க்கைத்துணையாக தம்முடன் இணைத்துக்கொண்டு கண்டவர்கள் வியக்கும் வண்ணம் இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து மாலினி, குகதாசன், ரவிதாசன், திருரோகினி ஆகிய பிள்ளைகளைப் பெற்றார்.

அமரர் சரோஜினி அவர்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி வசதிகளையும் வளமான வாழ்வையும் வழங்கி அவர்களது முன்னேற்றத்தைக் கண்டு களிப்புற்றார். இவரது சிரேஷ்ட புத்திரி மாலினி திரு. திருமதி மகேஸ்வரன் தம்பதிகளின் புதல்வன் பிரபாகரனை கரம்பற்றி பிரசாந்தி, சிவகாமி, பிரணவி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று வாழ்கின்றனர். இவர்களது சிரேஷ்ட புத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகதாசன் அமரர் திரு. மகாதேவன் திருமதி. பொன்னம்மா தம்பதிகளின் மகள் வத்சலாவை கரம்பிடித்து சக்தி எனும் மகவைப் பெற்று வாழ்கின்றனர்.

இவர்களது கனிஷ்ட புத்திரன் ரவிதாசன் அமரர் திரு கந்தையா திருமதி. தனலட்சுமி தம்பதிகளின் மகள் ரோகினியை கரம்பிடித்தார்.

இவர்களது கனிஷ்ட புத்திரி திருரோகினி திரு. திருமதி நடராஜா தம்பதிகளின் புத்திரன் ராஜேஷ்கண்ணனை கரம்பற்றி பிரணவன் எனும் மகவைப் பெற்று வாழ்கின்றனர்.

அமரர் சரோஜினி தான் வாழ்ந்த காலத்தில் தனது நண்பர்கள் உறவினர்களுக்கு தன்னால் இயன்ற சேவையை செய்வதில் பெரும்நாட்டம் கொண்டவர். இல்லை என்ற சொல்லுக்கு இடமளிக்காது அவரை நாடி எந்த உதவியைக் கேட்டாலும் தனக்கு ஏற்படக் கூடிய சிரமங்களைப் பொருட்படுத்தாது மனமுவந்து கொடுக்கும் உளப்பாங்கு கொண்டவர்.

அமரர் சரோஜினி அவர்களுடைய இவ்வுலக வாழ்வு பூரணத்துவமானதும் மானிட வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்திற்கு அமைவானதாகவும் திகழ்ந்ததெனக் கூறின் மிகையாகாது.

அன்னார் தன்வாழ்க்கையில் பெற்ற இன்பம் இறைவன் சித்தமே என்று 2008.08.12ம் திகதி ஏகாதசி தினத்தில் இறைவனடி சேர்ந்தார்.

பிறந்தோர் இறப்பது யதார்த்தம் எனவே அன்னாரின் ஆத்மசாந்திக்காக குலதெய்வமான கரப்பிட்டியந்தனை பிள்ளையாரை வேண்டுவோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் புலம்பல்

பண்புறும் உள்ளத்தோடு
பயன்பெறும் வாழ்வு தந்து
திண்ணியராகப் பெற்ற
மக்களைப் பேணிக்காத்து
புண்ணியக் கடமை செய்து
போற்றிடும் சேவை செய்து
கண்ணிமைப் பொழுதில் நேரில்
விண்ணிலே கலந்து விட்டாய்

அன்பிற்கோர் உருவமாகி
அயலவர் போற்ற வாழ்ந்தாய்
துன்பங்கள் வந்த போதும்
துணிவுடன் இதயம் தாங்கி
பின் தூங்கி முன்னெழுந்து
முறைப்படி சேவை செய்தாய்
உன்பிரிவால் என்னுயிரே
என் தூங்கும் என் கண் இரா

**- கணவன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா நீ எங்கு சென்றாய்

பத்துத் திங்கள் கருவினிற் சுமந்து
பாங்குடன் எமை வளர்த்து
அன்பு, அறிவு, இரக்கம், உண்மை போன்ற
பண்புகளை எமக்கு ஊட்டி
பாரினில் எமை நற்பிரஜைகளாய்
உலாவிட வைத்த எம்
அன்புத் தெய்வமே அம்மா நீ எங்கு சென்றாய்

உங்கள் உருவத்தை எம்மால் மறக்க முடியவில்லை
உங்கள் இழப்பை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை
உங்களைப் பார்க்கத் துடித்த வேளையிலே
எங்களைத் துடிக்க வைத்தது உங்கள் பிரிவுச் செய்தி

ஆறாத துயரில் அழுது புலம்பும் எம்மை ஆறுதல் படுத்த
இனி நீங்கள் எம் அருகில் இல்லை
ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றோம்
உமது ஆசியை விண்ணுலகிலிருந்து வழங்குவீராக

**- பிள்ளைகள் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்குகிறோம் நாங்கள்

சிரித்த முகம் சிந்திடாத வெண்மை
நெற்றித் திலகத்துடன்
சுற்றி சுற்றி வந்து, சுற்றம் பல சேர்ந்து,
சுந்தரமாய் வாழ்ந்திட்ட சுந்தரியிவள்
நோயுற்றபோதும் நொந்திடாத மனத்துடனே
நொடிகள் பல சொல்லி நொருங்கிடாமல்
பார்த்திட்ட உத்தமியிவள்
பெற்றவர்கள் பெயர்விளங்க உற்றவர்கள்
ஒருங்கிணைய ஒற்றுமையாய் உழைத்து
ஓய்வெடுக்கச் சென்றுவிட்டாள் ஏங்குகிறோம் நாங்கள்

**எங்கள் அம்மாவின் நினைவில் ஏங்கும்**
**மாலினி, குகதாசன், ரவிதாசன், திருரோகினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரியே சோதனை தந்தாய்

உடன்பிறப்புக்கள் நாம் இங்கு
உற்ற துணையின்றி உருகிநிற்க
உருகவிட்டு உறங்கி விட்டாய்
உள்ளம் இங்கு பதறுதம்மா
உதவிக்கு இங்கு யாரிடமினி நாம் செல்ல
உரிய பதிலளிக்க உயிரே நீ இல்லை
உணர்வுடன் நாமிங்கு வாழ
சோதனை தந்தாய்
உறங்கவில்லை நம் விழிகள்

**உணர்வுடன் உடன்பிறப்புக்கள்**
**அன்னம்மா சுப்பிரமணியம்**
**ஆறுமுகம் அம்பலவாணர்**
**மனோன்மணி இராஜரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தின் சமூகத்தின் ஒளிவிளக்காக விளங்கிய திருமதி. சரோஜினி அமிர்தசிங்கம் அவர்களின் மறைவு பேரிழப்பாகும்

தாய் தந்தையரையும் சமூகத்தையும் இளவயதிலிருந்து நேசித்து எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்த திருமதி சரோஜினி குடும்ப வாழ்வில் ஈடுபட்ட பின்னரும் அதே அருங்குணங்களைக் கடைப்பிடித்த சிறந்த குடும்பப் பெண்மணியாக வாழ்ந்து வந்தார்.

களபூமியில் புறக்டர் ஆறுமுகம் என்றால் எல்லோருக்கும் தெரிந்த பிரசித்தி பெற்ற நொத்தாரிசு. தந்தையிடம் வருபவர்களை மிக இளவயதிலிருந்தே அன்புடன் வரவேற்று, உபசரித்து அனுப்பும் பண்பாளராக விளங்கியவர்.

மிக இளவயதிலிருந்தே சரோஜினியை நன்கு அறிந்தவன் என்ற முறையில் அவரது அரும்பெரும் குணங்கள் மறையும் வரை மங்கா ஒளியாக விளங்கியவர். அமரர் சரோஜினியின் தந்தையாரும் சமூக அரசியல் ஈடுபாடு கொண்டவர். திருமணம் செய்துகொண்ட திரு. அமிர்தசிங்கம் அவர்களும் சமூக அரசியல் ஈடுபாடு கொண்டவர். காரை நகரில் தமிழரசுக் கட்சி அரசயிலில் திரு. அமிர்தசிங்கம் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர். அவர் திருமணமான பின்னரும் அரசியலில் ஈடுபடுவதற்கு உறுதுணையாக இருந்தவர் சரோஜினி அவர்கள்.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுவந்த திரு. அமிர்தசிங்கத்தின் அரசியல் பணிக்கு மிக ஒத்துழைப்பு வழங்கியவர் சரோஜினி. தந்தை செல்வா, திரு. அமிர்தலிங்கம், திரு. திருச்செல்வம் மற்றும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் வீட்டுக்கு வரும்போது நன்கு உபசரித்து தனது கணவனுக்குப் பெருமை தேடியதோடு அத்தலைவர்களின் பாராட்டையும் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர், களபூமியில் நான், திரு. சபாரத்தினம், திரு. அமிர்தசிங்கம் ஆகிய மூவரும் அடிக்கடி அமிர்தசிங்கம் வீட்டில் கூடி அரசியல் இயக்கம் பற்றி கூட்டம் நடத்துவோம். எங்களுக்கு தேனீர் சிற்றுண்டி வழங்கி மிகுந்த ஆதரவு நல்கிவந்த தமிழரசுக் கட்சி தீவிரவாதி. ஒரு இலட்சியப் பெண்மணியாக வாழ்ந்தவர். அமைதியாக இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு நல்கியவர். நோயுற்ற நிலையிலும் தமிழீழ உணர்வுடன் வாழ்ந்தவர்.

திரு. அமிர்தசிங்கத்தின் குடும்பவாழ்வும், சமூக அரசியல் பணியும் சிறப்புடன் நடைபெற உறுதுணைபுரிந்தவர் அவரது துணைவியார். குடும்பப் பொறுப்புக்கள் அதிகரித்து நோயுற்றிருந்த காலத்திலும், குடும்பத்தோடு அரசியல் பணிகளுக்கு தமது ஆதரவை நல்கி வந்த அரும்பெரும் குணம் படைத்த பண்புமிகு பெண்மணி.

அன்னாரது வாழ்க்கை நெறி ஏனைய குடும்பப் பெண்களுக்கும் முன் உதாரணமாகும். அன்னாரது மறைவினால் நாம் ஒரு சகோதரியை, உற்ற நண்பரை, ஊரவரை இழந்த ஆறாத்துயரில் ஆழ்த்தியது.

அன்னாரது இறுதியாத்திரையில் கலந்துகொள்ள முடியாத நிலையில் எமது கண்ணீர் அஞ்சலியாக இதைச் சமர்ப்பிக்கின்றேன்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது அருமைக் கணவருக்கும், பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய திக்கரை முருகனைப் பிரார்த்திப்போமாக.

ஐ. தி. சம்பந்தன்
களபூமி
காரைநகர்

15, Rutland Road,
London E7 8PQ
UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனற் செல்வம் மல்கும்
சீர் கொள் செங்காட்டங் குடியதனில்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும்
கணபதீச்சரம் காமுறவே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நால் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றியேழ் இருக்கை
இறைவனே போற்றி! போற்றி!

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கண் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத லாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறுடன் தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

## காயத்ரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ தத் ஸ்விதுர்
வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## ஸ்ரீ விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா யகர்காக்க:
வாய்ந்த சென்னி:
அளவுபடா அதிகசுவந் தரதே மதோற்கடர்தாம்
அமர்ந்து காக்க:
வளறர நெற்றியை என்றும்விளங்கயகா சிபர்காக்க:
புருவந்தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க: தடவிழிகள் பாலசந்
திரனார் காக்க:
கவின்வளரும் அதரம்கச முகர்காக்க: தால்அங்கணக்
கிரீடம் காக்க:
நவில்சி புகம் கிரிசைசுதர் காக்க: தனி வாக்கைவிநா
யகர்தாம் காக்க:
தவிர்தலுரு திளங்கொடி போல்வளர்மணி நாசியைச்
சிந்தி தார்த்தர் காக்க:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிக்காக்க: களம்
கணேசர் காக்க:
வாமமுறும் இருதோளும் வயங்கு கந்த பூர்வசர்தாம்
மகிழ்ந்து காக்க:
ஏமமுறு மணிமலைவிக் கினவிநா சன்காக்க:
இதயந்தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க: அகட்டிலைத்துலங்(கு)
ஏரம்பர் காக்க:
பக்கம்இரண் டையுந்தராதரர் காக்க: பிருட்டத்தைப்
பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க: விளங்கிலிங்கம் வியாளபூ
டணர்தாம் காக்க:
தக்கருய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க கச
கனதை அல்லல்
உக்கண பன்காக்க: ஊருவைமங் களமூர்த்தி
உவந்து காக்க:
வாழ்கரம்கப் பிரப்பிசாத னர் காக்க: முன்கையை
வணங்குவார்நோய்
ஆழ் தரச்செய் ஆசாபூ ரகக் காக்க: விரல்பதும்
அத்தர் காக்க:
கேழ்கிளரும நகங்கள் விநா யகஆ காக்க: கிழக்கினிற்புத்
தீசர் காக்க:
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க: விக்கினவர்த்
தனர்மேற் கென்னுந்
திக்கதனிர் காக்க: வாயுவிற்கசகன் னர்காக்க:
திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க: வடகிழத்தில் ஈசநந்
தனரே காக்க:
ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க: இர வினும் சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டன் மாட்டும்

ஓகையின்விக் கினகிருது காக்க: இராக் கதர்பூதம்

உறுவே தாளம்

மோகினிபேய் இவையாதி உயிர்திறத்தால் வருந்து

வரும் முடிவிலாத

வேகமுறு பிணிபலவும் விலக்குபா சாங்குசர்தாம்

விரைந்து காக்க:

மதி, ஞானம், தவம், தானம், மானம் ஒளி, புகழ்,

குலும், வண்சரீரம், முற்றும்:

பதிவான தனம், தானியம், கிருகம், மனைவி, மைந்தர்,

பயில்நட் பாதிக

கதியாவும் கலந்து சர்வாயுதர்காக்க: காமர் பவித்

திரர் முன்னான

வீதியாரும் சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும்

விரும்பிக் காக்க:

என்றிவ்வா நிதுதனைமுக் காலமும் ஓதிடின், நும்பால்

இடையூறொன்றும்

ஒன்றுமுறா, முனிவரர்காள்: அறிமின்கள்: யாரொருவர்

ஓதினாலும்

மன்றஆங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக


மாகி மன்னும்

பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களாலுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாபம் முதலியவைகளும் நீங்கும். பெருஞ்செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்ராதிகளும் உண்டாகும். இதைப் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு மொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்கு குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனும் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருவில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்
(சிவபுராணம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

## (திரோதானசுத்தி)

### திருப்பெருந்துறையில் அருளியது

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

**திருச்சிற்றம்பலம்**

1. போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

2. அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

3. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

5. பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

6. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியம்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எஙகளை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

10. புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙண்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்போவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தோரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய் 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

**திருச்சிற்றம்பலம்**

முத்துநல் தாமம்பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்தெடுக்க வொட்டோம்
செறிவுடைய மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தால்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ

டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்

தேவர் கனாவிலுங் கண்டறியாச்

செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்

சேவகம் ஏந்தியவெல் கொடியான்

சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்

சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்

செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்

சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்

வானக மாமதிப் பிள்ளை பாடி

மால்விடை பாடி வலக்கை யேந்தும்

ஊனக மாமழுச் சூலம் பாடி

உம்பரும் இம்பரும் உய்ய வன்று

போனக மாகநஞ் சுண்டல் பாடிப்

பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே 17.

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி

அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்

கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்

காலனைக் காலால் உதைத்தல் பாடி

இயைந்தன முப்புரம் எய்தல் பாடி

ஏழை அடியோமை ஆண்டு கொண்ட

நயந்தனைப் பாடிநின் றாடி றாடி

நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

*(திருப்பொற்சுண்ணம் முற்றிற்று)*

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையுங் கைகூடும்
நிமலரருள் கந்த சஷ்டி கவசந்தனை

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரடின நெஞ்சே குறி

## நூல்

### நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருக வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியிற் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுண்டிரு வடியை உறுதியென் றென்னும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் யெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக டின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோரும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டுக் கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெகுண்டது வோடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காக
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக,
ஆடினே னாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றி யிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக நீங்க,
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடனே அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**கந்தர்சஷ்டி கவசம் முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி துதி



# குமரகுருபரர் அருளிய சகலகலாவல்லி மாலை

1. வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்
பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கை யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு(து)
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்
கொலோ என்று கொண்டு தெள்ளி
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பீதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த் தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்லிற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டொடாறு
முடனாயா நாள்க ளவைதான்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீற ணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அறநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 6

செப்பிள முலைநன் மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியுமப்பு மப்பு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிச்செய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற தனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொ னெங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணம் முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே ! 11

திருச்சிற்றம்பலம்

**- கோளறு பதிகம் முற்றிற்று -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

ஒழுக்கம் விழுப்பந்தருந் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவை பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள்காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே

**- யோகசுவாமிகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

1. கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீசனியிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானுடமே.

2. வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலு நெஞ்சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே.

3. வேதத்தின் உட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம் தாம்பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே

4. ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவல்யான்
செய்யும் திருவொற்றி ஊருடையீர் திருநீறும் இட்டுக்
கையும் தொழப் பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே.

5. விட்டுவிடப் போகுதுயிர் : விட்டவுடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேரமும் சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்

6. அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே : விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே : விம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத்து அழும் மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே.

7. முடி சார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்
அடி சார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிசுவை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன் ?

வட்டிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன் ?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன் ?

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு ?

அள்ளி இடுவ தரிசியே? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துதி வெண்பா

சோடிழந்த அன்றிலை போல் துயரமானேன்

தோகைமயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்

காடுகளில் இனம் பிரிந்த கலைகளானேன்

கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்

ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்

உற்றதொரு துணையில்லாப் பித்தனானேன்

பாடுபட நானறியேன் பழனிவேலோ

பச்சைமயிலேறிவந்து எமை ரட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியை விளக்க வினாவிடை

பண்டிதர் மு. கந்தையா பீ. ஏ.

**01. இறந்தவருக்கு கிரியை செய்வதன் அர்த்தமென்ன?**
இறந்ததன் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

**02. இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு? எப்படி வாழ்வு?**
அவருக்கு சுவர்க்கத்திலும் நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் பூமியுற் பிறந்து முன் வாழ்ந்தது போல வாழும் வாழ்வுண்டு. சுவர்க்கவாழ்வு இன்பானுபவம். நரகவாழ்வு துன்பானுபவம். திரும்பவரும் பூமி வாழ்வு இன்ப துன்பக் கலப்பான அனுபவம்!

**03. இறந்த பின்பு அவர் இங்கில்லை. அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?**
இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள்வரை அவர் அதாவது அந்தியேட்டிவரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவதுதான் விட்ட உடலின் தொடர்புநீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்தி செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழும் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவசாதியார் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச்செய்கிறார்கள்.

**04. இக்கிரியைகளை அபரக் கிரியைகள் என்பதேன்?**
அவை இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் என்பதனால் தான், அபரம் என்றால் பின்.

**05. அபரக்கிரியைகள் எவை எவை?**
பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத்திதி, திவசம் என்பனவாம்.

**06. அபரக் கிரியை உடலுக்காகவோ, உயிருக்காகவோ?**
உயிருக்காகவேதான். ஆனால் அந்தியேட்டிவரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாகவும் உயிரைக்கருதிச் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம்?**

இக்கிரியைகளால் உயிருக்கு இருவிதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன்மேல் பெற வேண்டிய அநுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று

**08 சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம்?**

அபரக்கிரிகைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்கு தக்க அளவு உயிரைப்பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

**09. நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்றுதானே எல்லோரையும் குறிக்கிறார்கள், அப்படியானால் கிரியைக்கு என்ன அவசியம்?**

ஒன்று அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடையவேண்டும் என்ற நல்ல விருப்பத்தினால், உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக்கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்யவேண்டும்.

**10. பிரேதக் கிரியையில் கும்பபூசை, அக்கினி காரியங்கள் எல்லாம் செய்வதேன்?**

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகளைத்தான். கும்பங்களில் உருத்திரனையும் திக்குப் பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்கினியிலும் சிவனை எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகிறது. கும்பங்களைப் பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டாகும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுதலால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்பட்டதால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலைவிட்டுப் பிரிந்தாலும் ஒருவகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கு சிவத்தன்மை பதியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. உடலை விட்டுப்பிரிந்த பின்னும் உயிர்உடல் தொடர்பு நீங்காதிருக்கிற தென்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்பமுடியும்?**

அப்படி அது தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் காட்சியாற் காணமுடியாது. காணும் பக்குவம் சாதாரணமான எங்களுக்கில்லை. பக்குவமுள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அநுமானித்து நம்புவதற்குரிய ஏதுக்கள் நடைமுறையில் இருக்கின்றன. இறந்தவர் உயிர் விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர், அல்லது தண்ணீர்ச் செம்பு வைப்பதுண்டு. எட்டு என்ற வைபவத்திலன்று அவர் விரும்பி அருந்திவந்த சகல உணவுப் பண்டங்களும் படைப்பதுண்டு, அங்கே பாடல் படிப்புகள் முடிந்தபின் படைத்தவற்றிற் சிறிது எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதுண்டு. இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரிந்த பின்னுங்கூடி உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

**12. அங்ஙனமாயின், அவர் சுவர்க்க, நரகம் போவாரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போது இங்கேதான் இருக்கிறார் என்பது அதற்கு மாறுபாடாயிருக்கிறதே!**

அதற்கு இது மாறுபடாது, எங்ஙனமெனில் இப்போது சொல்லப்படுகிற இந்தத் தொடர்பு முற்றாக நீங்கப்பட்டதன் மேல் தான் அவர் சுவர்க்க நரகங்களிற் செல்வர். அந்தியேட்டியில் தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

**13. அந்தியேட்டியில் அது நீக்கப்படும் என்பது எப்படி?**

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக் கோடிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூளையில் ஐந்து நிற மாக்கள் சதுரவடிவமாகப் பரப்பப்பட்டிருக்குமே! அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும், பஞ்சபூதங்களினால் அமைந்தது அவர் உடம்பில் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் மாவடிவான சதுரங்களில் பஞ்சபூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கி விடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. அந்தியேட்டியிலும் தர்ப்பையில் ஆளுருவஞ்செய்து குளிப்பாட்டி பொற்சுண்ண மிடித்துச் சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கு தென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்.

**15. சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடே அந்தியேட்டியும் செய்கிறார்கள் அது ஏன்?**

அதையும் அறியத்தான் வேண்டும். சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விஷேசமாக தீக்ஷை, ஆசாரம் ஒழுக்கம், சாதனை, சிவபூசை ஒழுங்கு உள்ளவர்களாயிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விசேட பக்குவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத்தால் அப்படி நிகழ்கிறது.

**16. அஃதிருக்க பிரேதக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ணமிடிக்கிறார்களே அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப்படும் அவருடைய தநு, கரணம், புவனம் போகம் எல்லாவற்றையும் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில் தான் செய்யப்படுகின்றது.

**17. பொற்சுண்ண மிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப்பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே! அது ஏன்?**

பொற்சுண்ண மிடித்தலினால் இறந்தவருடைய தேகத்தில் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ் சேரத் தகுதியாகிறார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் போலிவும்பொருள் விளக்கமும் திருப்பொற் சுண்ணப்பதிகம் பாடல்களில் உண்டு. அதனாலேயே திருப்பொற் சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்புப்பட்டிருக்கின்றது. உண்மையில் சிவலோகஞ் சேருந் தகுதியுள்ளவர் விஷயத்தில் அது உண்மையாய் முடியும். மற்றவர் விஷயத்தில் உபசாரமாகும். என்றாலும் பரவாயில்லை ஏனெனில், இவர்களுக்கும் எப்போவெனினும், தமக்குரிய காலத்திற் சிவலோகமடைய வேண்டியவர்களே. அது நியாயமான உண்மை. நியாயமான உண்மையை உபசாரமாகக் கையாளுவதில் பழுதில்லை. அது திருத்தத்துக்குச் சிறந்தவழி என்பது சைவ விளக்க நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?**

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில் நக்னதானம் ஏகோதிட்டம் தசுதானம் சபிண்டீகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக்கிரியைகள் எனப்படும். அந்தியேட்டில் தேகத்தொடர்பு நீங்கப் பெற்றவர் தனக்குரிய சுவர்க்க, நரககதிகளிற் செல்வார். அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமையானது. இருளானதுவிக்கினங்களோடு கூடியது. ஆதலால் அவ்வித கஷ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக்கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதால் தான்.

**19. வீட்டுக்கிரியை அழைப்பிதழில் சிலர் சபிண்டீகரமக்கிரியை என்று மட்டும் குறிக்கிறார்களே அது ஏன்?**

அது வேறொரு விசேஷத்தினாலுமல்ல, வீட்டுக்கிரியையின் பகுதிகள் என மேற்சொன்னவற்றிற் சபிண்டீகரணம் பிரதானமானது என்பதால் தான். எங்ஙனமெனில் இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப்போய் தன், சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு, முன்சொன்ன, பிதிரர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிரகிளோடு சேர்க்கப்பட வேண்டும். பிதிரர்களுக்கு அறிகுறியாக மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர் குழைத்துருட்டிய பிண்டங்களையிட்டு வைத்து அவற்றுக்கெதிர் இறந்தவர்க்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டு, கிரியைசெய்பவர்.

எல்லோரையும் ஒரு சேரப் பூசித்து எல்லோர்க்கும் நைவேத்தியம் கதலி பல தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்துத் தூப தீபாராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப் பெயர் பெற்றது.

**20. அவ்வாறு பிண்டத்தாந் குறிக்கப்படும் பிதிரர் என்பார் யார்? அவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு யாது?**

பிதிரர் என்பார் படைப்புக் காலத்தில் சிவனால் படைக்கப்பட்ட ஒரு தேவசாதியார். இறந்தவர் நலன்களைக் கவனிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலர்களாகச் சிவனால் நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். இறந்தவர் ஒரு ஆண் ஆனால் அவரது பிதாமகர் (பேரன்) பிரபிதாமகர் (பூட்டன் என்பதற்குப்) பொருந்தும் நிலைகளில் அவர்கள் இருப்பார். இறந்தவர் பெண்ணானால் அவரின் மாதா, மாதாமஹீ, பேத்தி பிரமாதமஹீ, பூட்டி என்றுமுறைக்குப் பொருந்தும் நிலைகளில் இருப்பார்கள். அதாவது இறந்தவர் பேரில் அவரது தகப்பன், தாய், பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி என்போர்க்கிருக்கும் கரிசனைக்குச் சமானமானகரிசனை யுள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள். இறந்தவர் பேரில் அவர்களைக் குறித்துச் செய்யப்படும் எள்ளு தண்ணீருமிறைத்தற் (திலதர்ப்பணம்) கிரியையால் அவர்கள் திருப்தியுற்று இவரை குறித்துச் செய்யும் தானதருமப்பலன்களை அவர்கள் ஏற்று அவற்றின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பார்கள். அதேவேளை கிரியை செய்பவர்மேல் அவர் தந்தை தாய் முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறவும் வகை செய்வார்கள். அதனால் தான் பிதிர்கடன் பிரதானகடன் எனப்படுகிறது.

**21. இப்படியான பரிவர்த்தனைகள் (கொடுக்கல் வாங்கல்கள்) உண்மையென நம்பலாமா? இவற்றுக்கான தொடர்பு சாதனங்கள் எங்கே?**

ஏன் நம்பக்கூடாது? சந்திர மண்டலத்துக்கு ஏதும் அனுப்பினாற் போய்ச்சேரும் என்று இப்போ சில வருடங்களுக்கு முன் யாபேரும் நம்பியதில்லை. இப்போ நம்புகிறார்கள். உண்மையில் பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் மெயில் வண்டியோ தந்திக் கம்பியோ ஒரு சாதனமுமில்லை. ஆனால் அனுப்பும் பொருள் போய்ச்சேர விஞ்ஞானத்தில் தொடர்பு சாதனம் இருக்கிறது. இச்சாதனத்தை மனிதன் இப்போதுதான் கண்டறிந்தான் என்பதேயன்றி இதற்கு முன் அதற்கு வழியிருந்ததில்லை என்பதற்கில்லை. அந்த அமைப்பை ஏற்படுத்தி வைத்த சிவன் மேற்குறித் பிதிரர்களுக்கும் பூமியிலுள்ளார்க்கும் இடையில் அப்படியொரு தொடர்புக்கான சாதனங்களை அமைத்து வைத்திருக்க மாட்டார் என்பதற்கு ஆதாரமில்லை. ஆனால் கடவுள் சம்பந்தப்பட்ட தொடர்புசாதனங்கள் அருவமாயிருந்தே தொழில் செய்யும் என. மனிதன் சம்பந்தப்பட்டவைதான் உருவமாயிருக்க வேண்டிய நிர்ப்பந்தமுண்டு. ஏனெனில் சந்திரமண்டலத் தொடர்பு சாதனம் போலப் பிதிர்மண்டலத்தொடர்பு சாதனமும் ஒரு காலத்தில் **24.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாமோ எனில் ஆகாது காரணம் என்னவெனில் நமது சூழலாகிய பஞ்சபூதப் பிராந்தியத்துக்குட்பட்ட அளவில்தான் உருவ அமைப்பு வாய்க்கும். அதற்கு அப்பாலான பிதிர்லோகம் முதலியவற்றிற்கு அது வாய்காகாது. தத்துவ இயல்பின்படி அது என்றும் அருவமாயிருக்கும் ஆனால் நம்பலாம்.

**22. இப்பரிவத்தனையில் புரோகிதராய் இருப்பரின் பங்கு யாது?**

கிரியை செய்பவருக்கும் இறந்தவருக்கும் தொடர்பூட்டதிகாரி போலப் பிதிரர் இருப்பது போல கிரியைச் செய்பவருக்கும் பிதிர்க்கும் இடையில் தொடர்பூட்டதிகாரி போல இருப்பவர் புரோகிதர். புரோகிகரானவர்நல்லறி வொழுக்கம் அக்கினி காரியம், சிவபூசை நெறிகளும் உடையவராயிருந்தால் அவரிடத்தில் பிதிர்கள் திருப்தியடைவார்கள். அத்தொடர்பில் இவர் தானங்களை ஏற்கும் போது இதம் சிவாய நம இது சிவனுக்கு எனக்கல்ல என்று சொல்லி ஏற்க வேண்டிய விதியுண்டு. தானம் சற்பாத்திரமானவர்கல் கையில் கொடுக்கப்பட்டால் சிப்பியின் வாயில் விழுந்த நீர் முத்தாய் விளைவது போலப் பெரும் பயனாய் விளையும் அந்த நிலையில்லாத போது கமரிலூற்றிய பால்போலாகும்.

**23. சிராத்தம் என்பது யாது?**

அந்தியேட்டிக்குப் பின் இறந்தவரைக் குறித்து நிகழும் கிரியைகள் எல்லாம் பொதுவில் சிரார்த்தம் எனப்படும். சிரத்தையோடு செய்வது சிரார்த்தம் என்ற விளக்கத்தின் பேரில் அது அமையும், சிரத்தை என்பது கிரியை செய்பவர் இறந்தவர் மேற்கொள்ளும் அன்பு, அவரைக் குறித்துச் செய்யுஞ் செயல்களில் காட்டும் நேர்மை, மேற்கொள்ளும். பிரயாசை எல்லாவற்றையும் அடக்கும். நம்மவர் கூழலில், ஆட்டத்திதி, திவசம் இரண்டுந்தான் சிராத்தம் என சிறப்பாகக் குறிக்கப்படுவதுண்டு. சும்மா, ஐயருககரிசி கொடுப்பது என்ற பாவனன மட்டிலிருந்தால் அது சிராத்தமாகாது. தெய்வ சிந்தனையும் தேவாரதிருவாசக பாராயணமும் உபவாசமுமாயிருந்து உத்தமமான திரவியங்களைத் தேடிப்பக்திபூர்வம்நமகாச் செய்தாற்றான் அது சிராத்தமென்ற பெயருக்குப் பொருந்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய். எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Raj Praveen Printers : 2344045, 078-5119348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org